தகவல் அறியும் உரிமைச் சட்டம் - மிக அவசரம்

(பதிவஞ்சலில்)

**உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

அனுப்புநர்
திருமதி ராகினிரவிச்சந்திரன்
பொது தகவல் அலுவலர் /
துணை ஆணையாளர் - 2(பொ),
உணவுப் பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
சேப்பாக்கம், சென்னை -5.

பெறுநர்
திரு.ரா. விஜயகுமார்,
2/142, செங்கன்கொட்டாய்,
சோலைக்கொட்டாய்,
தர்மபுரி- 636704.
8778092701.

ந.க.எண்.க3/ 22999 /2026, நாள் 24.08.2026

ஐயா,

பொருள்: தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 - உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை - திரு.ரா.விஜயகுமார், தர்மபுரி மாவட்டம் என்பவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சில தகவல்கள் கோரியது- தொடர்பாக.

பார்வை: திரு.ரா.விஜயகுமார், தர்மபுரி மாவட்டம் என்பவரது தகவல் அறியும் உரிமைச் சட்ட மனு நாள்: 12.08.2026 (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்: 03.8.2026).

*******

தகவல் அறியும் உரிமைச் சட்டம் - 2005 பிரிவு 6(1)-ன் கீழ் பார்வையில் காணும் மனு இவ்வலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் தங்களது தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில் கோரப்பட்டுள்ள தகவல்கள் கீழ்கண்டவாறு வழங்கப்படுகிறது.

| வ.எண் | கோரிய தகவல் | வழங்கப்படும் தகவல் |
|---|---|---|
| 1. | புதிய மின்னணு குடும்ப அட்டை பெற எரிவாயு நுகர்வோர் அட்டை கட்டாயமாக தேவையா அல்லது தேவையில்லையா என தகவல் வழங்கவும் | புதிய மின்னணு குடும்ப அட்டை பெற எரிவாயு இணைப்பு ரசீது கட்டாயம் கிடையாது. |
| 2. | குடும்ப அட்டை விண்ணப்பிக்கும் போது எரிவாயு நுகர்வோர் அட்டை கண்டிப்பாக பதிவேற்றம் செய்ய வேண்டும் என்ற உத்தரவும் ஏதேனும் பிறப்பிக்கப்பட்டுள்ளதா அப்படி பிறபிக்கப்பட்டுள்ளது என்றால் அதன் ஆணை நகல் வழங்கவும் | எரிவாயு இணைப்பு ரசீது கட்டாயம் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்று உத்தரவுகள் ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. |
| 3. | புதிய மின்னணு குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்து எத்தனை நாட்களுக்குள் குடும்ப அட்டை வழங்க வேண்டும். | மக்கள் சாசனம் 2018 ன் படி புதிய குடும்ப அட்டை வழங்குவதற்கு 60 நாட்கள் என கால வரையறை செய்யப்பட்டுள்ளது.<br>04.07.2024 தேதியிட்ட புதிய வழிகாட்டு நெறிமுறைகளின் படி |

| | | |
|---|---|---|
| | | கால வரையறை ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை. |
| 4. | புதிய குடும்ப அட்டை விண்ணப்பிக்க கட்டாயமாக விண்ணப்பதாரர் சமர்பிக்க வேண்டிய ஆவணங்கள் தகவலாக வழங்கவும். | மக்கள் சாசனம் 2018 ன் படி, புதிய குடும்ப அட்டை விண்ணப்பம் செய்ய குடும்ப உறுப்பினர்கள் அனைவரின் ஆதார் அட்டை கட்டாய ஆவணமாக பதிவேற்றம் செய்ய வேண்டும். |
| 5. | புதிய குடும்ப அட்டை விண்ணப்பம் செய்தால் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் என்னென்ன என தகவல் வழங்கவும் | மக்கள் சாசனம் 2018 ன் படி, புதிய குடும்ப அட்டை பெற விழைவோர், குடும்ப உறுப்பினர்கள் அனைவரின் ஆதார் அட்டையுடன் கீழ்க்காணும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை புதிய குடும்ப அட்டை விண்ணப்பிக்கும் போது, முகவரிக் ஆதாரமாக வழங்க வேண்டும்.<br>1.எரிவாயு இணைப்பு இரசீது.<br>2.சொத்து வரி இரசீது.<br>3.வாடகை ஒப்பந்த பத்திரம்.<br>4.மின் கட்டண இரசீது. |
| 6. | புதிய மின்னணு குடும்ப அட்டை விண்ணப்பம் செய்யும் போது எரிவாயு நுகர்வோர் அட்டை இணைத்தால் மட்டுமே குடும்ப அட்டை வழங்கப்படுமா என தகவல் வழங்கவும். | வ என் 05 க்கான தகவல் பொருந்தும். |
| 7. | குடும்ப அட்டை விண்ணப்பம் செய்தால் எரிவாயு நுகர்வோர் அட்டை கட்டாயம் இணைத்தால் மட்டுமே குடும்ப அட்டை வழங்கப்படும் என ஏதேனும் அரசு ஆணை பிறப்பித்து இருந்தால் அந்த அரசு ஆணை நகல் வழங்கவும். | புதிய குடும்ப அட்டை விண்ணப்பம் செய்ய எரிவாயு இணைப்பு ரசீது கட்டாயம் கிடையாது. இதற்கென அரசாணை ஏதும் இல்லை |

மேற்காணும் தகவல் தங்களுக்கு திருப்தியளிக்காவிட்டால், மேல்முறையீடு செய்து கொள்ள விரும்பினால் இக்கடிதம் கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் மேல்முறையீட்டு அலுவலர் / இணை ஆணையாளர் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சேப்பாக்கம் சென்னை-5 அவர்களுக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

24/8/16

பொதுத்தகவல் அலுவலர் /
துணை ஆணையாளர் – 2(பொ)